FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348080

1. District : திருவண்ணாமலை PS: வ.நகர.கா.நிலையம் Year: 2026 FIR No.: 03/AC/2026 Date: 19.06.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: மணல் திருப்புச் சட்டம் 1988 Sections பிரிவுகள்: 7 (a) r/w
(ii) Act சட்டம்: மணல் திருப்பு திருத்தச் Sections பிரிவுகள்: 7 (a) r/w 12
(iii) Act சட்டம்: சட்டம் 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 18.06.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to : சுமார் 11.55 மணிக்கு முன்பு
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 19.06.2026 Time : 14.30 மணி
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : எழுத்து மூலமாக.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 3 கி.மீ வடகிழக்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : உட்டார போக்குவரத்து அலுவலகம்
முறைக் காவல் எண் முகவரி திருவண்ணாமலை

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : G. கோகுல கண்ணன் (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர் M. கோபால்

(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு 19.07.1985 நாட்டினம் இந்தியன் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தலைமையிடத்து துணை வட்டாட்சியர் (g) Address : வட்டாட்சியர் அலுவலகம்
தொழில் முகவரி சூளகிரி வட்டம், திருவண்ணாமலை மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) திரு. N. எ.ஸ்வர மூர்த்தி, வயது 56 த/பெ நாச்சியப்பன், உட்டார போக்குவரத்து அலுவலர் திருவண்ணாமலை
2) திரு. செந்தில்குமார், மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பம்), திருவண்ணாமலை
மற்றும் சிலர்கள், - விபரம் தனித்தாள்களில் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

அபராதம் தனித்தாள்களில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

19.6.26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

19/06/2026

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

19.06.2026 at 15.30hrs

Name: பெயர் .....
Rank: நிலை .....No. எண் .....

தலைமை ஆம்வாளர்
எண்.தூ.கு.மாரிய
திருவண்ணாமலை

கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.3/AC/2026 u/s 7(a), 7(a) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வ.எண்.7-ன் இணைப்பு

வ.எண்.	தெரிந்த குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
1.	திரு.N.ஈஸ்வர மூர்த்தி வயது 56 த/பெ நாச்சியப்பன், வட்டார போக்குவரத்து அலுவலர், கிருஷ்ணகிரி. குடியிருப்பு முகவரி : நவகுப்பம் காடு, வீராச்சிப்பாளையம் அஞ்சல், சங்ககிரி மேற்கு, சேலம் மாவட்டம்.
2.	திரு.C.செந்தில்குமார், மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பம்), கிருஷ்ணகிரி.
3.	திரு.பழனி, வயது 58, த/பெ பாலகிருஷ்ணன், க.எண் 167,சேலம் மெயின் ரோடு, ஊத்தங்கரை.
4.	திரு.சுரேஷ், வயது 31, த/பெ நாராயணசாமி, க.எண். 329, விசுவாசம்பட்டி கிராமம், மகனூர்பட்டி அஞ்சல், ஊத்தங்கரை.
5.	திரு.நாகராஜ், வயது 45, த/பெ சின்னதம்பி, தொகரப்பள்ளி கிராமம், பர்கூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.
6.	திரு.பிரகாஷ், வயது 31, த/பெ சீனிவாசன், க.எண்.2/512, வகாப் நகர், கிருஷ்ணகிரி.
7.	திரு.கார்த்திக், வயது 27, த/பெ பழனி, க.எண்.1/137, தச்சாம்பட்டி கிராமம், திருவண்ணாமலை.
8.	திரு.ஜார்ஜ் தினேஷ், வயது 35, த/பெ அகஸ்டின், LIG 703, TNHB, கட்டிகானப்பள்ளி, கிருஷ்ணகிரி.
9.	திரு.கப்பார், வயது 65, த/பெ உசேன் சாப், குருவிநாயணப்பள்ளி, பர்கூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.3/AC/2026 u/s 7(a), 7(a) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வ.எண்.12-ன் இணைப்பு

இன்று 18.06.2026 ஆம்தேதி இரவு 21.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்திலிருந்தபோது என்னிடம் திரு.G.கோகுல கண்ணன், தமைலமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி அவர்கள் எழுத்து மூலமாக கொடுத்த புகாரினை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தறை அவர்களின் உத்தரவுபடி 19.06.2026-ம் தேதி 14.30 மணிக்கு பதிவு செய்த விவரம் பின்வருமாறு :-

அனுப்புநர்:G.கோகுல கண்ணன், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம். பெறுநர்: காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கிருஷ்ணகிரி. ஐயா, கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் இயங்கிவரும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இன்று அதிகப்படியான வாகனங்களை வருடாந்திர புதுப்பிப்பு செய்யவுள்ளதாகவும், அதிகபடியான புதிய வாகனங்கள் பதிவு செய்யவுள்ளதாகவும், மோட்டார் வாகன ஆய்வாளர் மேற்படி பணிகளை செய்ய இடைத்தரகர்களிடமிருந்து அதிகப்படியான தொகையை கையூட்டாக பெறுவதாகவும் கிடைத்த ரகசிய தகவலின் பேரில் கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் திடீர் தணிக்கை மேற்கொள்ளும் பொருட்டு இன்று 18.06.2026 ஆம் தேதி காலை 11.45 மணிக்கு நான் மற்றும் கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.S.ரவி மற்றும் காவலர்களுடன் கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து அரசு வாகனம் TN 22 G 7777 என்ற நான்கு சக்கர வாகனத்தில் புறப்பட்டு கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு பின்புறம் உள்ள வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு அருகே காலை 11.55 மணிக்கு வரப்பட்டது. அப்போது வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் முதன்மை நுழைவு வாயிலின் அருகே சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் சில நபர்கள் கையில் ஆவணங்களுடன் நின்றுகொண்டிருந்தனர். பின்னர், மேற்படி அலுவலகத்தில் உள்ள வட்டார போக்குவரத்து அலுவலர் அறையில் ஒரு நபர் அமர்ந்து பணி செய்து கொண்டிருந்தார். அவரிடம் தன்னையும், தன்னுடன் வந்த அலுவலர்களையும் அறிமுகம் செய்து கொண்டு, அவரை விசாரிக்க, அவர் தனது பெயர் N.ஈஸ்வரமூர்த்தி என்றும், தான் கடந்த 18.07.2025 ஆம் தேதி முதல் கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். பிறகு மேற்படி அலுவலகத்தில் உள்ள அனைத்து அலுவலர்களையும் மத்திய அறையில் ஆஜர் செய்யுமாறு வட்டார போக்குவரத்து அலுவலரிடம் கேட்டுக்கொண்டதற்கினங்க, அவர் மேற்படி அலுவலகத்தில் உள்ள அனைத்து அலுவலர்களையும் அலுவலகத்தின் மத்திய அறையில் ஆஜர்படுத்தினார். அவர்களிடம் தன்னையும், தன்னுடன் வந்த அலுவலர்களையும் அறிமுகம் செய்துகொண்டு, மேற்படி அலுவலகத்தில் திடீர் தணிக்கைக்கு வந்திருக்கும் விபரம் தெரிவிக்கப்பட்டது. பிறகு தணிக்கைக்கு வந்திருந்த அலுவலர்கள் தாங்கள்

ஒவ்வொருவரும் தங்களை சுய பரிசோதனை செய்து காண்பித்தனர். பிறகு அந்த அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களிடம் ஒவ்வொருவராக பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க அவரவர்கள் தம்மிடமிருந்த பணத்தை எடுத்து கீழ்கண்ட பட்டியலில் உள்ளவாறு ஆஜர் செய்தார்கள்.

வ. எண்	பெயர்	பதவி	கைவசம் வைத்திருந்த தொகை ரூ.
1	N.ஈஸ்வரமூர்த்தி	வட்டார போக்குவரத்து அலுவலர்	2700/-
2	M.சுரேஷ்	நேர்முக உதவியாளர்	300/-
3	S.தசரதன்	கண்காணிப்பாளர் B பிரிவு	415/-
4	M.M.பிரபு	கண்காணிப்பாளர் A பிரிவு	110/-
5	M.நிஷா	A-3 உதவியாளர்	200/-
6	K.நித்யா	தட்டச்சர் (B-2 இருக்கை)	150/-
7	P.சிவசக்தி	A-1 உதவியாளர்	300/-
8	V.சிதம்பரம்பிள்ளை	A-4 இளநிலை உதவியாளர்	500/-
9	D. மணிபாரதி	Bonton Staff (Temporary staff)	இல்லை
10	A.சிங்காரவேலன்	Bonton Staff (Temporary staff)	இல்லை
11	C.கணபதி	TESCO Staff	320/-

மேற்படி பட்டியலின் வரிசை எண் 1 முதல் 11 வரையில் உள்ள நபர்களிடம் அவரவர் வைத்திருந்த பணம் பற்றி விசாரிக்க அதை தங்களின் கை செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்தனர். அவர்களின் விளக்கம் ஏற்றுகொள்ளும் வகையில் இருந்ததாலும் தனிநபர் கையிருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டுப்பார்த்து அவரவர் பணம் அவரவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.ஈஸ்வரமூர்த்தி அவர்களிடம் மேற்படி அலுவலகத்தில் பணிபுரியும் மோட்டார் வாகன ஆய்வாளரை பற்றி கேட்க, அதற்கு வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்கள் மேற்படி அலுவலகத்தில் திரு.C.செந்தில்குமார் என்பவர் மோட்டார் வாகன ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், அவர் தற்போது அலுவலகத்திற்கு பின்புறம் உள்ள வாகனங்கள் பரிசோதனை செய்யும் இடத்தில் இருப்பதாக தெரிவித்து, மோட்டார் வாகன ஆய்வாளரை போனில் தொடர்புகொண்டபோது மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.C.செந்தில்குமாருடைய செல்போன் ஸ்விட்ச் ஆப் செய்யப்பட்டிருப்பதாக வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.ஈஸ்வரமூர்த்தி அவர்கள் தெரிவித்தார். பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.ஈஸ்வரமூர்த்தி அவர்களிடம் இவ் அலுவகத்தில் இன்றைய தேதியில் அரசு கணக்கில் வரவு செய்யப்பட்ட தொகை பற்றிய விவரம் கேட்க, அதற்கு அவர், மேற்படி அலுவலகத்தில் அரசு கணக்கில் பெறப்படும் தொகை எதுவும் ரொக்கமாக பெறுவதில்லை எனவும், அனைத்து தலைப்புகளிலும் பெறப்படும் தொகையானது ஆன்லைன் மூலம் பெறப்படுவதாகவும் தெரிவித்து அலுவலக கண்காணிப்பாளர் திரு.பிரபு அவர்களின் உதவியுடன் கணினியிலிருந்து பிரதி எடுத்து கொடுத்தார். அதில்

18.06.2026 ஆம் தேதி மதியம் சுமார் 14.35 மணி வரையில் அரசு கணக்கில் பல்வேறு தலைப்புகளில் செலுத்தப்பட்ட தொகை ரூ.11,79,784/- என தெரிவித்தார். மேற்படி கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்து எடுக்கப்பட்ட கணக்கு விவர அறிக்கையில் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.ஈஸ்வரமூர்த்தி அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணையின் நிமித்தம் செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. பிறகு வட்டார போக்குவரத்து அலுவலக வளாகத்திலிருந்து அழைத்து வந்த தனி நபர்களை பற்றி காவல் ஆய்வாளர் விசாரித்தும், அவர்களிடம் சொந்த பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க அவரவர்கள் தம்மிடமிருந்த பணத்தை எடுத்து கீழ்கண்ட பட்டியலில் உள்ளவாறு ஆஜர் செய்தார்கள்.

வ.எண்.	பெயர் மற்றும் முகவரி	திடீர் சோதனையின் போது கைவசம் வைத்திருந்த தொகை	சோதனைக்குப்பின் கைப்பற்றப்பட்ட/திரும்ப வழங்கப்பட்ட தொகை
1.	திரு.ட.அந்தோனி அலெக்ஸ், த/பெ.லூர்துநாதன், சகாயபுரம் கிராமம்,ஷ எலத்தகிரி அஞ்சல், பர்கூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.	சொந்த பணம் ரூ.500/-	ரூ.500/- திரும்ப வழங்கப்பட்டது.
2.	திரு.S.மயில்வேல், த/பெ சேட்டு, மேட்டு தெரு, கல்லாவி கிராமம் (ம) அஞ்சல், ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.	சொந்த பணம் ரூ.1250/-	ரூ.1250/- திரும்ப வழங்கப்பட்டது.
3.	திரு.குமார், வயது 37, த/பெ பாஸ்கரன், அந்தேரிப்பட்டி கிராமம், போச்சம்பள்ளி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.	சொந்த பணம் ரூ.1820/-	ரூ.1820/- திரும்ப வழங்கப்பட்டது.
4.	திரு.பழனி, வயது 58, த/பெ பாலகிருஷ்ணன், க.எண் 167, சேலம் மெயின் ரோடு, ஊத்தங்கரை.	சொந்த பணம் ரூ.18,300/-	ரூ.18,300/- சோதனைக்குப்பின் கைப்பற்றப்பட்டது.
5.	திரு.சுரேஷ், வயது 31, த/பெ நாராயணசாமி, க.எண். 329, விசுவாசம்பட்டி கிராமம், மகனூர்பட்டி அஞ்சல், ஊத்தங்கரை.	சொந்த பணம் ரூ.14250/-	ரூ.14250/- சோதனைக்குப்பின் கைப்பற்றப்பட்டது.

6.	திரு.நாகராஜ், வயது 45, த/பெ சின்னதம்பி, தொகரப்பள்ளி கிராமம், பர்கூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம். (சிவசக்தி டிரைவிங் ஸ்கூல்)	சொந்த பணம் ரூ.22480/-	ரூ.22480/- சோதனைக்குப்பின் கைப்பற்றப்பட்டது.
7.	திரு.பிரகாஷ், வயது 31, த/பெ சீனிவாசன், க.எண்.2/512, வகாப் நகர், கிருஷ்ணகிரி. (திவீன் டிரைவிங் ஸ்கூல்)	சொந்த பணம் ரூ.2300/-	ரூ.2300/- சோதனைக்குப்பின் கைப்பற்றப்பட்டது.
8.	திரு.கார்த்திக், வயது 27, த/பெ பழனி, க.எண்.1/137, தச்சாம்பட்டி கிராமம், திருவண்ணாமலை. (அங்காளம்மன் டிரைவிங் ஸ்கூல்)	சொந்த பணம் ரூ.530/-	ரூ.530/- சோதனைக்குப்பின் கைப்பற்றப்பட்டது.
9.	திரு.ஜார்ஜ் தினேஷ், வயது 35, த/பெ அகஸ்டின், LIG 703, TNHB, கட்டிகானப்பள்ளி, கிருஷ்ணகிரி. (பாரத் டிரைவிங் ஸ்கூல்)	சொந்த பணம் ரூ.500/-	ரூ.500/- சோதனைக்குப்பின் கைப்பற்றப்பட்டது.
10.	திரு.கப்பார், வயது 65, த/பெ உசேன் சாப், குருவிநாயணப்பள்ளி, பர்கூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம். (காளிகோவில் சோதனை சாவடியில் பணிபுரியும் தனிநபர்)	சொந்த பணம் ரூ.16330/-	ரூ.16,330/- சோதனைக்குப்பின் கைப்பற்றப்பட்டது.

மேற்படி பட்டியலின் வரிசை எண் 1 முதல் 3 வரையில் உள்ள நபர்களிடம் அவரவர் வைத்திருந்த பணம் பற்றி காவல் ஆய்வாளர் விசாரிக்க அதை தங்களின் கை செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்தனர். அவர்களின் விளக்கம் ஏற்றுகொள்ளும் வகையில் இருந்ததால் வரிசை எண் 1 முதல் 3 வரையில் உள்ள நபர்களின் பணம் அவரவர்களிடமே திருப்பிகொடுக்கப்பட்டது. மேலும் வரிசை எண் 4 முதல் 9 ல் குறிப்பிடப்பட்டுள்ள தனிநபர்களான திரு.பழனி, திரு.சுரேஷ், திரு.நாகராஜ், திரு.பிரகாஷ், திரு.கார்த்திக் மற்றும் திரு.ஜார்ஜ் தினேஷ் ஆகியோர் வைத்திருந்த பணம் பற்றி விளக்கம் கேட்க, அவர்கள் சற்று நேரம் அமைதியாக இருந்தனர். பின்பு மேற்படி பணம் பற்றி முன்னுக்கு பின் முரனான தகவல்களை தெரிவித்தனர். அவர்கள் கூறிய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும், அவர் முன்னுக்கு பின் முரணாக பதில்

கூறியதாலும் மேற்படி வரிசை எண் 4 முதல் 9 வரையிலான நபர்கள் வைத்திருக்கும் பணம் வாகனங்களை வருடாந்திர புதுப்பிப்பு செய்யவதற்காகவும், புதிய வாகனங்கள் பதிவுசெய்வதற்காகவும், வாகன ஓட்டுனர்கள் மற்றும் உரிமையாளர்களிடமிருந்து லஞ்சமாக பெற்று வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.N.ஈஸ்வரமூர்த்தி என்பவருக்கும் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில்குமார் என்பவருக்கும் கொடுப்பதற்காக வைத்திருக்ககூடும் என்று நம்புவதற்கான சரியான முகாந்திரம் இருந்ததால் மேற்படி பணம் ரூ.74,690/- விசாரணையின் நிமித்தம் இந்த செயல்முறை நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி வரிசை எண் 10-ல் உள்ள நபரான திரு.கப்பார் என்பவரை விசாரிக்க, அவர் தான் காளிகோவில் போக்குவரத்து சோதனை வாசடியில் பணிபுரியும் மோட்டார் வாகன ஆய்வாளர்களுக்கு உதவியாக இருந்துவருவதாக தெரிவித்தார். அவரிடம் எதற்காக வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு வந்தீர்கள் என்று கேட்க, தான் சோதனை சாவடி அலுவலர்கள் கூறியதன்பேரில் கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து அலுவலத்தில் இருந்து சோதனை அறிக்கை புத்தகங்களை வாங்குவதற்கு வந்ததாக தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்திருந்த பணம் பற்றி விளக்கம் கேட்க, அவர்கள் சற்று நேரம் அமைதியாக இருந்தார். பின்பு மேற்படி பணம் பற்றி முன்னுக்கு பின் முறனான தகவல்களை தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும், அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் கூறியதாலும் தனிநபரான திரு.கப்பார் அவர்கள் வைத்திருக்கும் பணம் சோதனை சாவடி அலுவலர்களிடமிருந்து லஞ்சமாக வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.N.ஈஸ்வரமூர்த்தி என்பவருக்கும் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில்குமார் என்பவருக்கும் கொடுப்பதற்காக வைத்திருக்ககூடும் என்று நம்புவதற்கான சரியான முகாந்திரம் இருந்ததால் மேற்படி பணம் ரூ.16,330/- விசாரணையின் நிமித்தம் இந்த செயல்முறை நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்டது. அதன்பிறகு வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் கீழ் தளத்தில் அமைந்திருந்த வட்டார போக்குவரத்து அலுவலர், நேர்முக உதவியாளர் (RTO), கண்காணிப்பாளர், இளநிலை உதவியாளர்கள் மற்றும் கணக்கர் ஆகியோரின் அறைகள் மற்றும் கணினி அறையினை அரசு சாட்சிகளின் முன்னிலையில் தணிக்கை செய்ததில் மேற்படி அறைகளில் சந்தேகத்திற்கு இடமான எந்தவிதமான பொருட்களோ, ஆவணங்களோ கைப்பற்றப்படவில்லை. அதன்பிறகு, வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.ஈஸ்வரமூர்த்தி அவர்களை அழைத்துக்கொண்டு மேற்படி அலுவலகத்தில் முதல் தளத்திற்கு வரப்பட்டது. மேல்தளத்தின் கிழக்குபுறத்தில் புகைப்படம் எடுக்கும் அறை இருந்தது. மேற்படி அறையினை அரசு சாட்சிகளின் முன்னிலையில் தணிக்கை செய்ததில் சந்தேகத்திற்கு இடமான எந்தவிதமான பொருட்களோ, ஆவணங்களோ கைப்பற்றப்படவில்லை. பின்னர் மேற்படி முதல்தளத்தில் கிழக்குபுறத்தில் இருந்த கூட்டஅறங்கத்திற்கு வரப்பட்டது. மேற்படி அறையில் எந்த நபரும் இல்லை. அந்த அறையில் சோதனை மேற்கொண்டதில் WINNER என்று அச்சிடப்பட்ட ஒரு கருப்பிநிற டிரவல் பேக் இருந்தது. அதைப்பற்றி வட்டார போக்குவரத்து அலுவலரிடம் கேட்க, அந்த பை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில்குமார் என்பவருடையது என்று தெரிவித்தார். மேற்படி பையினை வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.ஈஸ்வரமூர்த்தி அவர்களது முன்னிலையில் சோதனை செய்தபோது அந்த பையானது மூன்று அறைகளாக இருந்தது. அதில் இரண்டாவது அறையினை சோதனை செய்ததில் அதில் Government of Tamilnadu, Transport Department, VEHICLE INSPECTION RECORD இருந்தது. அதைப்பற்றி வட்டார போக்குவரத்து அலுவலரிடம் கேட்க, அது

மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில்குமார் அவர்கள் வாகனங்களை சோதனை செய்து வழக்கு தொடர்வதற்காக பயன்படுத்தும் ஆவணம் என்று தெரிவித்தார். அதனை சோதனை செய்தபோது அந்த ஆவணமானது வரிசை எண் No.B 608151 முதல் No.B 608200 வரை இருந்தது. அதில் 17.06.2026 ஆம் தேதி வரையில் No.B 608189 வரை பயன்படுத்தப்பட்டுள்ளது. பின்னர் மேற்படி பையின் மூன்றாவது அறையினை திறந்து சோதனை செய்ததில், அதில் POS மெசின் இருந்தது. அதைப்பற்றி வட்டார போக்குவரத்து அலுவலரிடம் கேட்க, அந்த மெசினானது மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில்குமார் அவர்களது பொறுப்பில் உள்ளது என்றும், வாகன சோதனையின்போது அபராத தொகையினை வசூலிக்க பயன்படுத்தும் உபகரணம் என்று தெரிவித்தார். அந்த இயந்திரத்தின் பின்புறத்தில் S/N: 1490806488 என்ற வரிசை எண் கொண்டதாக இருந்தது. மேற்படி VEHICLE INSPECTION RECORD மற்றும் POS உபகரனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில்குமார் அவர்களது கருப்புநிற டிரேவல் பையிலேயே வைத்து வட்டார போக்குவரத்து அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர், மேற்படி தளத்தில் படிக்கட்டினை ஒட்டி மேற்குபுறத்தில் வடக்கு முகம் பார்த்தவாறு ஒரு கணினி அறை இருந்தது. அந்த கணினி அறையினை ஒட்டி மேற்குபுறத்தில் கிழக்கு முகம் பார்த்தவாறு இருந்த பதிவறை முழுவதும் தணிக்கை செய்ததில் சந்தேகத்திற்கிடமான வகையில் எந்தவிதமான பொருட்களோ, ஆவணங்களோ கைப்பற்றப்படவில்லை. பின்னர் மேற்படி அலுவலகத்தின் வடக்கு புறத்தில் தெற்கு முகம் பார்த்தவாறு மூன்று அறைகள் வரிசையாக இருந்தன. மேற்படி அறைகளை பற்றி வட்டார போக்குவரத்து அலுவலரிடம் கேட்க, அவர் அதில் கிழக்கிலிருந்து முதலாவது அறை மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-2 அவர்களது அறை என்றும், இரண்டாவது அறை மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 அறை என்றும், மூன்றாவதாக உள்ள அறை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில்குமாருடைய அறை என்றும் தெரிவித்தார். மேற்படி மூன்று அறைகளும் பூட்டப்பட்டிருந்ததால், மேற்படி அறைகளில் சோதனை மேற்கொள்ளவில்லை. பின்னர் மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் அறைக்கு மேற்கு புறத்தில் 3 வரிசையில் 3 பகுதிகளாக தடுக்கப்பட்ட சிமெண்ட் அலமாரியில் பழைய ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. அந்த அலமாரிகளில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் வலதுபுறமிருந்து சோதனை செய்தபோது முதலாவது மேல் அறையிலிருந்த ஆவணங்களை வெளியே எடுத்து சோதனை செய்தபோது, அந்த ஆவணங்களுக்கு நடுவிலிருந்து இரண்டு காக்கிநிற கவர்கள் கீழே விழுந்தன. அந்த கவர்களை சோதனை செய்ததில், அதில் 500 ரூபாய் தாள்கள் கற்றையாக இருந்தது. அதன் ஒரு காக்கிநிற கவரில் உள்ள பணத்தை எண்ணிப்பார்க்கையில் அதில் பணம் ரூ.16,000/- (500x32=16000) இருந்தது. அதேபோல் மற்றொரு காக்கிநிற கவரில் உள்ள பணத்தை எண்ணிப்பார்க்கையில் அதில் பணம் ரூ.18,000/- (500x36=18000) இருந்தது. அந்த பணத்தை பற்றி வட்டார போக்குவரத்து அலுவலரிடம் விளக்கம் கேட்க, அதற்கு அவர் அந்த பணத்தை பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், தான் அந்த அலமாரியினை பயன்படுத்துவதில்லை என்றும் அவர் தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்கதக்க வகையில் இல்லாததாலும், அந்த பணம் பழைய வாகனங்களுக்கு FC செய்வதற்காக வாகன உரிமையாளர்களிடமிருந்தும், ஓட்டுனர் பயிற்சி பள்ளி உரிமையாளர்களிடமிருந்தும் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்கள் லஞ்சமாக பெற்ற பணமாக இருக்கக்கூடும் என்று நம்புவதற்கான சரியான முகாந்திரம் இருந்ததால் மேற்படி பணம் ரூ.34,000/- காக்கிநிற கவருடன் விசாரணையின் நிமித்தம் இந்த செயல்முறை

நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்டது. பின்பு, மேற்படி அலுவலகம் முழுவதும் தணிக்கை செய்யப்பட்டதில் சந்தேகத்திற்கிடமான வகையில் எந்தவிதமான பொருட்களோ, ஆவணங்களோ கைப்பற்றப்படவில்லை. அதன்பிறகு, வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.ஈஸ்வரமூர்த்தி அவர்களிடம் இந்த ஆண்டிற்கான படைவீரர் கொடிநாள் வசூல் பற்றி கேட்க, அவர் அலுவலக பணியாளர்களிடம் இந்த ஆண்டு படைவீரர் கொடிநாள் வசூல் செய்ததற்கான கோப்பினை ஆஜர் செய்யும்படி கெட்கப்பட்டது பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்கள் படைவீரர் கொடிநாள் வசூலானது ரொக்கமாக பெறுவதில்லை என்றும், ஆன்லைன் மூலம் பெறப்படுவதாகவும் தெரிவித்தார். மேற்படி திடீர் தணிக்கையின்போது கிருஷ்ணகிரி மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, திரு.C.செந்தில்குமார் அவர்கள் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.N.ஈஸ்வரமூர்த்தி அவர்களுக்கு எந்தவித தகவலும் கொடுக்காமல் தனது செல்போனை அனைத்துவிட்டு தன்னிச்சையாக வெளியே சென்றவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.N.ஈஸ்வரமூர்த்தி அவர்களிடம் அறிவுறுத்தப்பட்டது. மேலும் கைப்பற்றிய மொத்த பணம் ரூ.1,08,190/-, கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் திடீர் தணிக்கையின்போது தயார் செய்த செயல்முறை நடவடிக்கையையும் ஆஜர் படுத்துகிறேன். நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம் திரு.G.கோகுல கண்ணன். மேற்கண்ட புகாரின் பேரில் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தறை அவர்களின் உத்தரவுபடி கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.3/AC/2026 u/s 7(a) and 7(a) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 ன்படி இன்று 19.06.2026-ம் தேதி 14.30 மணிக்கு பதிவு வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் ஆகியவற்றை கிருஷ்ணகிரி மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி அவர்களுக்கு அனுப்பியும், மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

19/06/2026

Inspector of police

VCAC, Krishnagiri.